**செம்பாக்கம் நகராட்சியில் 31.8.2021ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திரு. வே. இராமர்,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்டு 2021 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.852** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை அறிவிப்பு நாள் 24.08.2021-ன் படி தாம்பரம் நகராட்சிக்கு அருகில் உள்ள பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் ஆகிய நகராட்சிகள், சிட்லபாக்கம், பெருங்களத்தூர், மாடம்பாக்கம், திருநீர்மலை, பீர்க்கண்காரணை ஆகிய பேரூராட்சிகள் மற்றும் திருவஞ்சேரி, அகரம்தென், மதுரப்பாக்கம், ஒட்டியம்பாக்கம், சித்தாலபாக்கம், பெரும்பாக்கம், வேங்கைவாசல், மேடவாக்கம், நன்மங்கலம், கோவிலம்பாக்கம், மூவரசம்பட்டு, திரிசூலம், கவுல் பஜார், பொழிச்சலூர், முடிச்சூர் ஆகிய கிராம ஊராட்சிகளை சேர்த்து தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் காணொளி காட்சி அறிவுரைகளில் தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் தாம்பரம் நகராட்சியுடன் செம்பாக்கம் நகராட்சியை இணைக்க இசைவு தெரிவித்து உரிய தீர்மானம் நிறைவேற்றி அதனை அரசிற்கு அனுப்பி வைக்கும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, செம்பாக்கம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் தாம்பரம் நகராட்சியுடன் இணைக்க இசைவு தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** தாம்பரம் நகராட்சி எல்லைக்கு அருகில் உள்ள 6.25 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சி 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 45356 ஆகும். (தற்போதைய மக்கள் தொகை 66340 ஆகும்). இந்நகராட்சிக்கு மிக அருகில் உள்ள தாம்பரம் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதால், மாநகராட்சிக்குரிய அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ஏதுவாக தாம்பரம் நகராட்சியுடன் செம்பாக்கம் நகராட்சியை இணைக்க மன்றம் இசைவு வழங்கலாம்.

**தீர்மான எண்.853** அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள் அச்சடித்து வழங்குதல் மற்றும் எழுது பொருட்கள் சப்ளை செய்தல் பணிக்காக இந்நகர் மன்ற தீர்மானம் எண்.792 நாள் 25.2.2021ல் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்யப்பட்டது. இந்நிலையில் அவசர அவசியம் கருதி அதே ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் எழுது பொருட்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. ஒதுக்கீடு தொகையினை விட கூடுதலாகும் செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 854 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு மாவட்டம்அவர்களின் 18.8.2021ம் தேதிய ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளை 65 DBC பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதிர் கொசுக்களை ஒழிக்க

1. வாகனப் புகைமருந்து தெளிப்பான்கள் 2 எண்ணிக்கை
2. பல்ஸ் பாக் புகை மருந்து தெளிப்பான்கள் 4 எண்ணிக்கை

மொத்தம் 6 எண்ணிக்கையிலான இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளது. அதில் வாகனப்புகை மருந்து தெளிப்பான் 1 எண்ணிக்கை கடந்த ஜனவரி 2021ம் மாதத்தில் வாங்கி வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள வாகனப் புகை மருந்து தெளிப்பான் 1 எண்ணிக்கையும், பல்ஸ் பாக் புகைமருந்து தெளிப்பான் 4 எண்ணிக்கையும் கடநத் 2020 மார்ச் பொது ஊரடங்ல் முதல் பயன்படுத்தப்படாமல் இருந்ததால் அதனுடைய பேட்டரி, ஹாட் பல்ப், ஸ்பார்க் பிளக், ஏர்பம்ப், டையபார்ட், டப்ளின் டியூப், பேனல் ஆகியன பழுது அடைந்துள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் டெங்கு குழிப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ளவும், பொது சுகாதார புகை மருந்து தெளிப்பான்கள் பயன்படுத்திட தயார் நிலையில் இருக்க மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டு உள்ளதால், இவ்வியந்திரங்களை பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் பழுது நீக்கம் பணிகளை உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.70000/—ற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 855 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சியில் 2021–2022ம் நிதியாண்டில் பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்காக இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.69/2020/இ1 நாள் 11.8.2021ன் படி 27.8.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5 ராஜபாண்டியன் அவென்யு விரிவு தார் சாலை அமைத்தல் பணி | 7.00 | வி. ராஜசேகரன் | 0.07% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | 1.06% அதிகம் |
| 2 | வார்டு எண்.1 நக்கீரன் தெரு மழைநீர் வடிகால்வாய், பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் பவநந்தியார் 4வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 9.50 | ஜெ. மணிகண்டன் | 0.05% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | 1.00% அதிகம் |
| 3 | வார்டு எண்.1 பவநந்தியார் குறுக்கு தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 9.90 | எஸ். மல்லிகா | 0.10% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | 1.05% அதிகம் |
| 4 | நகராட்சி பகுதியில் 145 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | 0.10% குறைவு |
| | | | வி. ராஜசேகரன் | 1.90% அதிகம் |
| 5 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 12 எண்ணிக்கையிலான பூங்காக்களை காவல் பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | 0.06% குறைவு |
| | | | வி. ராஜசேகரன் | 1.69% அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.856** அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண்.6

செம்பாக்கம் நகராட்சியில் 2021–2022ம் நிதியாண்டில் பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்காக இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.69/2020/இ1 நாள் 9.8.2021ன் படி 25.8.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அஸ்தினாபுரம் இணைப்பு ரோட்டில் அமைந்துள்ள சுடுகாடு முன் பகுதியில் கல்வெர்டு மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | 9.60 | ஆர்.பி. கன்ஸ்ட்ரக்ஷன் | 0.08% குறைவு |
| | | | அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் டெவலப்மன்ட் | 1.70% அதிகம் |
| 2 | அஸ்தினாபுரம் இணைப்பு ரோட்டில் அமைந்துள்ள சுடுகாடு உட்பகுதியில் குப்பை மாற்று நிலையம் தடுப்பு (Transfer Station) மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | 9.50 | ஆர்.பி. கன்ஸ்ட்ரக்ஷன் | 0.08% குறைவு |
| | | | அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் டெவலப்மன்ட் | 1.80% அதிகம் |
| 3 | அலுவலக வளாகத்தில் உள்ள OCC ல் உள்ள குப்பை துகளாக்கும் இயந்திரம் பழுது பார்த்தல் பணி | 0.50 | கே. ராமதாஸ் | 0.05% குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் | 0.80% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண். 857 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் **11.8.2021** அன்று பெறப்பட்ட **15**வது மத்திய நிதிக்குழு திட்ட பணிக்கான இரண்டு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | | Online | Offline |
|---|---|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக பேட்டரி வாகனங்கள் சப்ளை செய்தல் பணி-10 Nos | 18.00 | 1 | Shuttle Cars India Private Limited | Yes | Yes |
| | | | 2 | Enroyce Motors India Private Limited | Yes | Yes |
| | | | 3 | S.R. Enterprises | Yes | Yes |
| | | | 4 | V.M. Narayanamurthy | Yes | No |
| | | | 5 | Priyam Industries and Equipments | Yes | No |
| | | | 6 | Arun India Motors | Yes | No |
| | | | 7 | PR & Co | No | Yes |
| | | | 8 | Goodwill Energy Products Pvt Ltd | No | Yes |

பெறப்பட்ட 8 எண்ணிக்கையிலான ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்.1 மற்றும் 2ல் உள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகள் பெற்றதால் தேர்வு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வ.எண். 3 முதல் 8 வரையிலான ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியின்மை காரணத்தால் நிராகரிக்கப்பட்டது.

தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிக்கான விலை ஒப்பந்தப்புள்ளியினை (Price Bid) ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 19.8.2021ல் திறக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக பேட்டரி வாகனங்கள் சப்ளை செய்தல் பணி-10 Nos | 18.00 | Shuttle Cars India Private Limited | மதிப்பீட்டை விட 3.89% குறைவு |
| | | | Enroyce Motors India Private Limited | மதிப்பீட்டை விட 11.12% குறைவு |

**அலுவலக குறிப்பு:**

1. ஏற்கப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 11.12 சதவீதம் குறைவாக அளித்துள்ளதால், கூடுதல் வைப்புத் தொகையாக மதிப்பீட்டில் 10 சதவீத தொகையினை செலுத்த கோரலாம்.
3. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொண்டமைக்கான ஏற்பளிப்பு கடிதத்தினை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு வழங்கலாம்.

**தீர்மான எண். 858 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.8

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2021-22-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் விடுப்பட்ட தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணி | 9.80 |

அலுவலக குறிப்பு :–

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண். 859 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2021-22-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | அஸ்தினாபுரம் இணைப்பு ரோட்டில் அமைந்துள்ள சுடுகாடு முன் பகுதியில் கல்வெர்டு மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | 9.60 |
| 2 | அஸ்தினாபுரம் இணைப்பு ரோட்டில் அமைந்துள்ள சுடுகாடு உட்பகுதியில் குப்பை மாற்று நிலையம் தடுப்பு (Transfer Station) மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | 9.50 |
| 3 | அலுவலக வளாகத்தில் உள்ள OCC ல் உள்ள குப்பை துகளாக்கும் இயந்திரம் பழுது பார்த்தல் பணி | 0.50 |

அலுவலக குறிப்பு :–

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண். 860 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்காக இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.849/2021/இ1 நாள் 19.7.2021ன் படி 6.8.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5 சங்கோதியம்மன் கோயில் தெரு மற்றும் துர்கா காலனி 1வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி | 7.00 | வி. ராஜசேகரன் | 0.03% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | 3.78% அதிகம் |
| 2 | வார்டு எண்.7 கௌசிக் அவென்யு, ஷா அவென்யு மற்றும் வார்டு எண்.15 | 10.00 | வி. ராஜசேகரன் | 0.03% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | காமராஜபுரம் மெயின் ரோடு - இம்மானுவேல் தெரு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி | | ஆர். சுஜாதா | 3.89% அதிகம் |
| 3 | வார்டு எண்.7 சுந்தர் அவென்யு, சரவணா நகர் 7வது தெரு மற்றும் வார்டு எண்.12 பாரதிதாசன் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி | 10.00 | ஜெ. மணிகண்டன் | 0.05% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | 0.79% அதிகம் |
| 4 | வார்டு எண்.13 வீரமாமுனிவர் தெரு, ரங்கா காலனி மெயின் ரோடு மற்றும் ஸ்டேட் பாங்க் காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி | 10.00 | ஜெ. மணிகண்டன் | 0.05% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | 0.79% அதிகம் |
| 5 | வார்டு எண்.1 திருமலை நகர் 1வது, 2வது மெயின் ரோடு, திருமலை நகர் 1வது , 2வது, 3வது, 3வது குறுக்கு தெரு, 4வது, 5வது, 6வது மற்றும் 7வது தெருவில் பிவிசி பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி | 10.00 | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | 0.10% குறைவு |
| | | | எஸ்.வி.பி எலக்ட்ரிகல்ஸ் | 1.75% அதிகம் |
| 6 | வார்டு எண்.1 திருமலை நகர் 3வது மெயின் ரோடு, திருமலை நகர் 8வது, 9வது, 10வது, 10வது குறுக்கு, 11வது, 12வது 13வது, 13வது விரிவ, 14வது, 15வது 16வது தெரு, விஜயக்குமார் அவென்யு மற்றும் ஏர்போர்ட் காலனியில் பிவிசி பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி | 10.00 | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | 0.10% குறைவு |
| | | | எஸ்.வி.பி எலக்ட்ரிகல்ஸ் | 1.71% அதிகம் |
| 7 | வார்டு எண்.6 நகராட்சி அலுவலக வளாகத்தில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலைத்தொட்டி (Sump) கட்டுதல் பணி | 20.00 | ஆர்.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.10% குறைவு |
| | | | அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் டெவலப்மன்ட் | 0.53% அதிகம் |
| 8 | வார்டு எண்.7 சரவணா நகர் பகுதியில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலைத்தொட்டி (Sump) கட்டுதல் பணி | 20.00 | ஆர். சுஜாதா | 0.01% குறைவு |
| | | | வி. ராஜசேகரன் | 0.60% அதிகம் |
| 9 | வார்டு எண்.12 கணேஷ் நகர் பகுதியில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலைத்தொட்டி (Sump) கட்டுதல் பணி | 20.00 | எவர்பிரைட் இன்ஜினியரிங் கம்பெனி | 0.11% குறைவு |
| | | | என். ஸ்ரீராமுலு | 2.50% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
3. ஒதுக்கீட்டிற்கு கூடுதலாகும் தொகையினை பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண். 861 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் ஆய்வுக்கூட்டம் நாள் 31.7.2021ல் 2021–2022 ஆம் நிதியாண்டில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள வரி நிலுவைதாரர்களுக்கு குறுஞ்செய்தி தொலைபேசி வாயிலாக நிலுவை மற்றும் நடப்பாண்டு தொகையினை அறிவித்து வரி மற்றும் வரியில்லா இனங்களின் மீது தீவிர வரி வசூல் செய்திட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.40000க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 862 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வேளச்சேரி மெயின் ரோடு, ஜெயின் சுதர்சனா அபார்ட்மெண்ட்டில் பிளாக் 3TH3 க்கு சொத்து வரிவிதிப்பு எண் 001/008/01352 க்கு 2014–15 முதல் அரையாண்டு முதல் ஒரு அரையாண்டிற்கு ரூ.937/– வீதம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் அதே வீட்டிற்கு சொத்து வரி விதிப்பு எண் 001/008/01178 க்கு 2009–2010 முதல் அரையாண்டு முதல் தவறுதலாக கேட்பு எழுப்பட்டுள்ளது. எனவே இரட்டை வரி விதிப்பாக வரும் சொத்து வரி எண்001/008/01178யை நீக்கம் செய்யவும் அதன் கேட்பு தொகை ரூ.26642/– யை வஜா செய்ய கோரியும் திரு.வி.அரவிந்த் என்பவர் 04.08.2021ந் தேதிய கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** இரட்டை வரிவிதிப்பு என்பதால் வரிவிதிப்பு எண் 001/008/01178யை ரத்து செய்தும் ரூ.26642/– யை 2021–22 இரண்டாம் அரையாண்டு வரை உள்ள நிலுவை கேட்பினை வஜா செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1003/2021/அ1

**தீர்மான எண். 863 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

செம்பாக்கம் நகராட்சியில் பல்வேறு வகையான பணிகள் மேற்கொள்ள முதலமைச்சர் தனிப்பிரிவு மனு, உங்கள் தொகுதியில் முதல்வர் பிரிவு மனு, தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட புகார் கடிதங்கள் மற்றும் முன்னாள் நகர மன்ற அனைத்து கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைள் வரப்பெற்றதை நேராய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் கீழ்காணும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 15 வரையிலான பகுதியில் பழுதடைந்துள்ள தார் சாலைகள், சிமெண்ட் சாலைகள் சீர் செய்தல் | 9.00 |
| 2 | நகராட்சி பூங்காக்களில் பழுதடைந்துள்ள சிறுவர் விளையாட்டு சாதனங்கள் பழுது நீக்கம் செய்தல் | 6.00 |
| 3 | வார்டு எண்.5 கிருஷ்ணா நகர் 1வது, 2வது மெயின் ரோடு, மற்றும் 1வது குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 9.00 |
| 4 | வார்டு எண்.2 மகாகணபதி தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மழைநீர் தொட்டி அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் | 5.30 |
| 5 | வார்டு எண்.7 கனகராஜா குறுக்கு தெரு மற்றும் அப்பர் தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 7.80 |
| 6 | வார்டு எண்.1 எம்.ஏ.வி ராயல் தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் பவநந்தியார் பூங்கா சாய்தளம் அமைத்தல் | 3.00 |
| 7 | வார்டு எண்.1 திருமலை நகர் 3வது தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 7.90 |
| 8 | வார்டு எண்.5 ராதே ஷியாம் அவென்யு பூங்கா தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் உயர்த்துதல் | 5.00 |
| 9 | வார்டு எண்.1 செந்தில் அவென்யு 2வது தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 6.90 |
| 10 | வார்டு எண்.1 பிரசாந்த் காலனி 2வது தெரு மற்றும் களத்துமேடு குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 7.00 |
| 11 | வார்ட்டு எண்.1 பிரசாந்த் காலனி மெயின் ரோடு மற்றும் 3வது தெரு தார் சாலை அமைத்தல் | 7.50 |
| 12 | வார்டு எண்.12 வள்ளல் யூசப் நகர் 3வது தெரு மழைநீர் வடிகால்வாய் உயர்த்தி ஆர்.சி.சி. மூடி அமைத்தல் | 7.00 |
| 13 | வார்டு எண்.7 ராஜ ராஜேஸ்வரி நகர் தார் சாலை அமைத்தல் | 8.50 |
| 14 | கூடுதல் அலுவலக வளாகத்தில் மேற்கூரையில் வெதரிங் கோர்ஸ் அமைத்தல் மற்றும் தடுப்பு அறை அமைத்தல் | 9.80 |
| 15 | வார்டு எண்.3 ஈஸ்வரி நகர் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்துதல் | 3.50 |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. புகார் மனுக்கள் மற்றும் கடிதங்கள் வரப்பெற்றதை தொடர்ந்து நேராய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 864 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.14

செம்பாக்கம் நகராட்சியில் பல்வேறு வகையான பணிகள் மேற்கொள்ள முதலமைச்சர் தனிப்பிரிவு மனு, உங்கள் தொகுதியில் முதல்வர் பிரிவு மனு, தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட புகார் கடிதங்கள் மற்றும் முன்னாள் நகர மன்ற அனைத்து கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகள் வரப்பெற்றதை நேராய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் கீழ்காணும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | நுண்ணுயிர் உரமாக்கும் நான்கு மையங்களுக்கு (OCC) 4 எண்கள் அறவை இயந்திரங்கள் சப்ளை செய்து பொருத்துதல் | 9.80 |
| 2 | நுண்ணுயிர் உரமாக்கும் மையத்திற்கு (MCC) கன்வேயர் பெல்டு மற்றும் அறவை இயந்திரம் சப்ளை செய்து பொருத்துதல் | 6.00 |
| 3 | காமராஜபுரம் உடற்பயிற்சி கூடம் வர்ணம் பூசுதல், மராமத்து பணி மற்றும் குடிநீர் மின் மோட்டார் அறை அமைத்தல் | 6.00 |
| 4 | வார்டு எண்.1 திருமலை நகர் மெயின் ரோடு மழைநீர் வடிகால்வாய், சிறுபாலம் அமைத்தல் பணி, திருமலை நகர் 3வது மெயின் ரோடு சிறுபாலம் மற்றும் ஏர்போர்ட் காலனி சிறுபாலம் அமைத்தல் | 9.80 |
| 5 | வார்டு எண்.3 அஸ்தினாபுரம் இணைப்பு சாலை – விஜிபி பொன் நகர் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 4.90 |
| 6 | வார்டு எண்.3 சாம்ராஜ் நகர் 8வது தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 9.90 |
| 7 | வார்டு எண்.5 நிஷா அவென்யு முல்லை தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.20 |
| 8 | வார்டு எண்.5 டெல்லஸ் அவென்யு 1வது மெயின் ரோடு விரிவு (ராகவா கார்டன்) மற்றும் சங்கோதியம்மன் கோயில் தெரு மெயின் ரோடு தார் சாலை அமைத்தல் | 8.50 |
| 9 | வார்டு எண்.5 துர்கா காலனி 4வது தெரு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் சிமெண்ட் சாலை பழுது பார்த்தல் | 2.00 |
| 10 | வார்டு எண்.7 கனகராஜா தெரு தார் சாலை அமைத்தல் | 8.60 |
| 11 | வார்டு எண்.12 ஔவையார் தெரு தார் சாலை அமைத்தல் | 3.80 |
| 12 | அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி பழுது பார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் | 5.00 |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதியளிக்கலாம்.
2. புகார் மனுக்கள் மற்றும் கடிதங்கள் வரப்பெற்றதை தொடர்ந்து நேராய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மேற்படி பணிகளை மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண். 865 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.15

செம்பாக்கம் நகராட்சியில் பல்வேறு வகையான பணிகள் மேற்கொள்ள முதலமைச்சர் தனிப்பிரிவு மனு, உங்கள் தொகுதியில் முதல்வர் பிரிவு மனு, தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட புகார் கடிதங்கள் மற்றும் முன்னாள் நகர மன்ற அனைத்து கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகள் வரப்பெற்றதை நேராய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் கீழ்காணும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண். 3 ஹெரிட்டேஜ் ஜெயேந்திரர் நகர் 2வது, 3வது, 13வது மெயின் ரோடு மற்றும் விரிவு ஆகிய பகுதிகளில் பழுதடைந்த தெருமின் விளக்கு கேபிள் வடம் மாற்றி அமைத்தல் | 8.40 |
| 2 | வார்டு எண். 3 ஹெரிட்டேஜ் ஜெயேந்திரர் நகர் 1வது, 2வது, 3வது, 4வது, 5வது குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்த தெருமின் விளக்கு கேபிள் வடம் மாற்றி அமைத்தல் | 8.40 |
| 3 | வார்டு எண். 3 ஹெரிட்டேஜ் ஜெயேந்திரர் நகர் 6வது, 7வது, 8வது, 9வது, 10வது, 11வது மற்றும் 12வது குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்த தெருமின் விளக்கு கேபிள் வடம் மாற்றி அமைத்தல் | 8.20 |
| 4 | காமராஜபுரம் மெயின் ரோடு, களத்துமேடு தெரு, பொன்னியம்மன் கோயில் தெரு, மாரியம்மன் கோயில் தெரு மற்றும் அன்னை அஞ்சுகம் அம்மையார் பூங்கா ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள உயர் கோபுர மின் விளக்குகள் பழுது பார்த்தல் | 5.00 |
| 5 | வார்டு எண்.4 சிவகாமி நகர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி பழுது பார்த்தல், பொது கிணறு மூடி அமைத்தல், மின் இணைப்பு பெட்டிகள் அமைத்தல் மற்றும் குடிநீர் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 9.00 |
| 6 | அலுவலகம் மற்றும் அம்மா உணவக ஜெனரேட்டர்கள், அலுவலகம் மற்றும் அம்மா உணவக மின் சாதனங்கள் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் ஆண்டு பராமரிப்பு செய்தல் | 6.00 |
| 7 | வார்டு எண்.3 ஈஸ்வரி நகர் மற்றும் வார்டு எண்.14 எம்.ஜி.ஆர்.நகர் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிய நீர்மூழ்கி மின் மோட்டார் அமைத்தல் | 3.50 |
| 8 | நகராட்சி பகுதிகளில் பழுதடைந்த மின் விளக்குகள் டுநுனு விளக்குகளாக மாற்றி அமைத்தல் | 9.80 |
| 9 | வார்டு எண்.3 ஹெரிட்டேஜ் ஜெயேந்திரா நகர் பூங்காவில் மின் விளக்கு | 9.90 |

| | | |
|---|---|---|
| | அமைத்தல் | |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதியளிக்கலாம்.
2. புகார் மனுக்கள் மற்றும் கடிதங்கள் வரப்பெற்றதை தொடர்ந்து நேராய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மேற்படி பணிகளை மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண். 866 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

தமிழக அரசு மூலம் வெளியிடப்படும் அறிவிக்கைகள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையிலும், அரசு செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்லைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படியும், இந்நகராட்சி பகுதியில் “**கொரோனா வைரஸ் 2ம் அலை**” தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சி பகுதியில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக 20000 எண்ணிக்கையிலான நான்கு வகையான கொரோணா விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள், தொற்ற பரிசோதனை மேற்கொள்ள படிவங்கள் மற்றும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வீடு வீடாகச் சொன்று நீர்கலன்களை அழித்து அபேட் மருந்து தெளித்து கொசுப்புழு கண்டறிந்த விபர படிவங்கள் ஆகியவற்றை அச்சடித்து பெற வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் உள்ளூர் அச்சு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.560000/–ற்கு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணி விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| | **Printing and Supply of the following items** | |
| 1 | A4 Size Sticker - Model 1 to 4 (Each 5000 Nos) | 20000 Nos |
| 2 | A4 Size ICMR SWAB Test Forms Double Side | 50000 Nos |
| 3 | Legal Size DBC Enumerator Forms | 50000 Nos |

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.867 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

செம்பாக்கம் நகராட்சியில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிக்கும் பணியில் பயன்பாட்டில் உள்ள கீழ்காணும் சுகாதார வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் கலன் பழுதடைந்து விட்டதால் வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளது. இதன் காரணமாக குப்பை சேகரிக்கும் பணி மேற்கொள்வதில் தடை ஏற்படுகிறது. மேலும் பருவமழையின் காரணமாக அவ்வப்பொழுது ஏற்படும் புகார்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

| வ. எண் | வாகன விவரம் | பதிவு எண் |
|---|---|---|
| 1 | காம்பாக்டர் | TN11 Q 6490 |
| 2 | காம்பாக்டர் | TN11 Q 6615 |
| 3 | டாடா ஏஸ் | TN11 AJ 8264 |
| 4 | டாடா ஏஸ் | TN11 AJ 8283 |

எனவே, பொது மக்களின் நலன் கருதியும், தற்போது கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு வருவதாலும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் அறிவிக்கப்பட்ட பொது ஊரடங்கு உத்திரவினை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நேரடி விற்பனையாளர் / விநியோகஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் நேரடி விற்பனையாளர் / விநியோகஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து விலைப்பட்டியல் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.868 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய கட்டிடங்கள், கூடுதல் கட்டிடம், குடியிருப்பு அல்லாத கட்டிடம், கல்வி, தொழிற்சாலை, குடிசைத் தொழில், ஓட்டல், கல்யாண மண்டபங்களுக்கு அனுமதி வழங்கும் போது வசூலிக்க வேண்டிய கட்டணங்களை இந்நகர மன்ற தீர்மானம் எண்.366 நாள்28.9.2018 ன் படி நிர்ணயம் செய்து, கட்டண விவரங்களை பொது மக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளுக்கு விளம்பரம் செய்யப்பட்டு, அதன் பின்னர் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி புதிய கட்டண விகிதங்களை 1.11.2018 முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

2020-2021ம் நிதியாண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கையில் புதியதாக நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விகிதங்களில் கீழ்காணும் இனங்களுக்கு செயல்பாட்டில் வேறுபாடுகள் கண்டறியப்பட்டது.

ஏற்கனவே நிர்ணயம் செய்த கட்டண விவரம்

| வ. எண் | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | கால அளவு | ஏற்கனவே அமலில் உள்ள கட்டணம் | புதியதாக நிர்ணயம் செய்த மற்றும் திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 7 | 13 | குடியிருப்பு வீடு கட்ட மனை அங்கீகரிக்க | 1 ச.மீ | ஒரு முறை மட்டும் | - | 700.00 |
| 7 | 29 | மழைநீர் சேகரிப்பு | ஒரு குடியிருப்பிற்கு | மூன்று ஆண்டுகளுக்கு | 3000.00 | 3000.00 |

எனவே, பொது மக்களின் நலனை கருதியும், நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தும் நோக்கத் தோடு மேற்காணும் இரு இனங்களில் முறையே விவர தலைப்பிலும், அளவு தலைப்பிலும் கீழ்காணும் திருத்தங்களை மேற்கொள்ளவும், திருத்திய விவரங்களை பொது மக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளுக்கு விளம்பரம் செய்யவும், அதன் பின் 1920ம் வருடத்திடய திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 321 (2), 328, 329 ன் கீழ் கட்டிட / திட்ட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்கள் திருத்திய விகிதங்களின் அடிப்படையில் வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தற்போது திருத்தம் செய்த கட்டண விவரம்

| வ. எண் | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | கால அளவு | ஏற்கனவே அமலில் உள்ள கட்டணம் | புதியதாக நிர்ணயம் செய்த மற்றும் திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 7 | 13 | ஆங்கீகரிக்கப்டாத மனைப்பிரிவில் உள்ள மனையில் குடியிருப்பு அனுமதி வழங்க மனை அங்கீகரிக்க கட்டணம் | 1 ச.மீ | ஒரு முறை மட்டும் | 700.00 | 700.00 |
| 7 | 29 | மழைநீர் சேகரிப்பு | ஒரு குடியிருப்பு (1 Kitchen) | ஒரு முறை மட்டும் | 3000.00 | 1000.00 |
| | | | குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு (Non Residential) | ஒரு முறை மட்டும் | 3000.00 | 2000.00 |

**அலுவலக குறிப்பு:** திருத்திய விகிதங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். இது குறித்து அறிவிக்கை விளம்பரம் செய்து பொது மக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகளை பெறலாம். திருத்திய கட்டண விகிதங்களின் படி 1.10.2021 முதல் வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.869** **அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.19

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் தன்னார்வலர்கள் மற்றும் லேப் டெக்னிசீயன்கள் பணியில் ஈடுபடுத்தியமைக்கு ஜுலை 2021 மாத மதிப்பூதியம் ஒப்பந்ததாரர் அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் நிறுவனத்திற்கு வழங்கியது. | 250000 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.870** **செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி